சாத்தியமில்லையென்றால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தினை உரிமையாளர்களிடமே இழப்பீட்டுடன் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைசசர் ஆகியோரிடம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*

(எ) தாம்பரம் தொகுதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள். சுருக்கமாகக் கேளுங்கள். இல்லையெனில் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க நேரிடும்.*

***திரு. எஸ்.ஆர். இராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்மல், நாகல்கேணி, பொழிச்சலூர், திருநீர்மலைப் பகுதிகளில் 200–க்கும் மேற்பட்ட சாயப் பட்டறைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றின் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படுவதால், கால்வாய் வழியாகச் சென்று, மணப்பாக்கம்* check dam*–ல் தேங்குவதால், முகலிவாக்கம், மணப்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கிராமங்களின் நிலத்தடி நீர் கெட்டுப் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(ஏ) நெய்வேலி அனல் மின் நிலையம், ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி* NLC India *நிறுவனத்தில் பணியாற்றுகிற 9,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள், 26 பணி நாட்கள் வேலை கேட்டு, கடந்த 8 நாட்களாக போராடி வருகின்றார்கள். போராடி வருகின்ற தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையில், அவர்களுடைய கோரிக்கையைப்*

2017 ஜூலை 19] [திரு. சபா. ராசேந்திரன்]

பரிசீலித்து, வேலை நிறுத்தத்தை உடனே முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், எங்கள் மாவட்டத்தின் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

(ஐ) ராதாபுரம் தொகுதி, தாது மணல் ஆலைகளை மீண்டும் திறத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

***திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ராதாபுரம் தொகுதியிலேதான் நீண்ட நெடிய கடற்கரை இருக்கிறது. அங்குள்ள தாது மணல் ஆலைகள் நீதிமன்ற உத்தரவின்படி மூடப்பட்டுள்ளன. அரசு அதிகாரிகள் தற்போது அவற்றில் ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் சுமார் இருபதாயிரம் தொழிலாளர்கள் நேரடியாகவும், சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உடனடியாக ஆய்வுகளை முடித்து, அந்த ஆலைகளைத் திறந்து, தொழிலாளர்களுடைய வீடுகளில் அடுப்பு எரிகிற நிலையை உருவாக்க வேண்டுமென இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

(ஒ) கிருஷ்ணகிரி தொகுதி, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக் கோரிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், கடைசியாக உங்களை அழைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் கடும் குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. தினந்தோறும் மக்கள் குடங்களை எடுத்துக் கொண்டு, ஆங்காங்கே அலையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் சொல்லி,